# கோயம்பேடு—விமான நிலையம் வரை பள்ளி மாணவர்கள் விழிப்புணர்வு பிரசாரம்

சென்னை, நவ. 14: குழந்தைகள் பாது காப்பை வலியுறுத்தி, பள்ளி மாணவ-மாணவிகள் சார் பில், கோயம்பேடு முதல் விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையம் வரை விழிப்புணர்வு பிர சாரம் வியாழக்கி ழமை நடைபெற்றது. இதில், குழந்தைகள் பாதுகாப்பை வலியு றுத்தி கோஷங்களை எழுப்பினர்.



கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் பதாகையை ஏந்தி விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பிய மாணவ, மாணவிகள்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இளைய இந்தியர்கள் சென்னைப் பிரிவு (Young Indians Chennai Chapter) ஆகியன சார் பில், குழந்தைகள் பாலியல் துன் புறுத்தலின் சமூகக் கேடு மற்றும் சைபர் குற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வு பிரசாரம் சென் னையில் வியாழக்கிழமை நடை பெற்றது. நிகழ்ச்சியில், திருவேற் காடு ஜிசிஎன் பிரைமேரி பள்ளி யைச் சேர்ந்த 350 பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். குழந் தைகள் பாதுகாப்பு தொடர்பாக கோஷங்களை எழுப்பினர். பூந் தமல்லி நெடுஞ்சாலை, கோயம் பேடு மெட்ரோ ரயில் நிறுவன கட்டடம் முன்பகுதியில் திரண்டு குழந்தைகள் பாதுகாப்பு தொடர் பாக கோஷங்களை எழுப்பி னர். தொடர்ந்து, கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையம் முதல் விமான நிலையம் மெட்ரோ ரயில் நிலையம் வரை பயணம் செய்து, ஒவ்வொரு ரயில் நிலையத்தில் கோஷங்களை எழுப்பி விழிப்பு ணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இதன் பிறகு, ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் மாணவ, மாணவிகளுடன் குழந் தைகள் தினம் கொண்டாடப் பட்டது.